JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**A1 to A4 absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of **10.02.2026.**

**C.C. 277/2010** **Name**: துரைசாமி **S/o**. முத்துச்சாமி **P.W.** 6

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 6 திரும்ப அழைக்கப்பட்டு**

**சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவ சமயத்தில் நான் கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்துக்கு கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக செல்லும்போது எங்களுடைய அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளில் அது குறிப்பு எழுதப்படும் என்றால் வருவாய் அலுவலரிடம் சொல்லிவிட்டு செல்வோம். தனிப் பதிவுகள் எதுவும் இல்லை. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கொலுசின் முத்திரையைப் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகஜரிலும் கொலுசின் முத்திரையை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரும், ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

2. காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் முறையாக சென்று இருந்தால் நான் காவல் நிலையம் சென்றதற்கான எழுத்து மூலமான ஆவணங்களை கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எழுத்து மூலமான ஆவணங்களை கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை